ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2513/35 - 2026 නොවැම්බර් මස 05 වැනි බුහස්පතින්දා - 2026.11.05

2513/35 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ 1/98 (II) (அ)

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டம்

25 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(இரண்டாம் அத்தியாயமன) பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்ததுவாசிக்கப்படும் 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகிய நான், இத்தால் பின்வரும் கட்டளையை ஆக்குகின்றேன்:-

1. இக்கட்டளையானது 2026 ஆம் ஆணடின் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை (இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் தொடர்பான கூட்டிணைத்தல் கட்டளையை இல்லாதொழிக்கல்) கட்டளை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்தமானியில் அதனது வெளியீட்டுத் திகதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

2. நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து பயனுறும் வகையில். (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 1995 ஆம் ஆண்டு யூலை 28 ஆம் திகதிய 882 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் தாபிக்கப்பட்ட இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்திற்கு உரித்தாக்கப்பட்ட, அதனால் வைத்திருக்கப்பட்ட அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனம், உரிமைகள், நலன்கள், சிறப்புரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்கு கைமாற்றப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கு உரித்தாக்கப்படுதலும் வேண்டும்.

3. எந்த நியமனத் திகதிக்கு உடன்முன்னர் நிறுவகம் திறத்தவர் ஒருவராக இருக்கின்றதோ அந்த நியமனத் திகதிக்கு உடன்முன்னர் உள்ளனவான ஒவ்வொரு ஒப்பந்தமும், உடன்படிக்கையும் அல்லது வேறு சாதனமும் நியமனத் திகதியிலிருந்து பயனுறும்வகையில்அதிகாரசபையினால்செய்துகொள்ளப்பட்டஒப்பந்தம்ஒன்றாக,உடன்படிக்கையாக அல்லது வேறு சாதனமாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடப்படலாம்.

4. நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்திற்கு எதிராக நியமனத் திகதிக்கு உடன்முன்னர் முடிவு நாளான ஏதேனும் வழக்கு, வழக்குநடவடிக்கை அல்லது விடயம் அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கு எதிராக தொடரப்படலாம் என்பதுடன் வலுவிற்கிடவும்படலாம்.

5. நியமனத் திகதிக்கு உடன்முன்னர் பதவிவகிக்கும் நிறுவகத்தின் ஒவ்வொரு அலுவலரும், சேவையாளரும் அல்லது ஊழியரும் நியமனத் திகதியிலிருந்து, நியமனத் திகதிக்கு உடன்முன்னர் ஏற்புடையற்பாலதான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு குறையாத சாதகமான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் அதிகாரசபையின் அலுவலராக, சேவையாளராக அல்லது ஊழியராக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் சேவை, விருப்பு மற்றும் ஓய்வூதிய நன்மைகள் தொடர்பிலான திரட்டப்பட்ட அனைத்து உரிமைகளும் பேணிப் பாதுகாக்கப்படுதலும் வேண்டும்.

6. நியமனத் திகதிக்கு உடன்முன்னர் நிறுவகத்திற்குச் சொந்தமான அல்லது நிறுவகத்தினால் பேணப்படும் அனைதது பதிவேடுகள், இடாப்புகள், புத்தகங்கள், கணக்குகள், ஆவணங்கள் மற்றும் வேறு ஆதனம் என்பன நியமனத் திகதியிலிருந்து பயனுறும் வகையில் அதிகாரசபைக்கு கைமாற்றப்படுதல் வேண்டும்.

7. நியமனத் திகதிக்கு உடன்முன்னர், நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட, நடாத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட மற்றும் நடைமுறையிலிருந்த ஏதேனும் கற்கைநெறி, பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், பரீட்சை சான்றிதழ் வழங்கல், ஆராய்ச்சி கருத்திட்டம், அங்கீகாரம், தர மதிப்பீடு அல்லது வேறு செயற்பாடு, நியமனத் திகதியிலிருந்து பயனுறும் வகையில் அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டதாக, நடாத்தப்பட்டதாக அல்லது வழங்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க தொடரப்படலாம் பூர்த்தி செய்யப்படலாம் வலுவுக்கிடப்படலாம் அல்லது ஏற்று அங்கீகரிக்கப்படலாம்.

8. நியமனத் திகதிக்கு உடன்முன்னர் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட கற்கைநெறி ஒன்றில் அல்லது நிகழ்ச்சித் திட்டமொன்றில் சேர்த்துக்கொள்ளப்பட்ட எவரேனும் ஆள் நியமித்த திகதியிலிருந்து பயனுறும் வகையில், அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட நேரொத்த கற்கைநெறியை அல்லது நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேர்த்துக்கொள்ளுதல் தொடர்பிலான உரிமைகளும் கடப்பாடுகளும் பேணப்படுதலும் வேண்டும்.

9. நியமனத் திகதிக்கு உடன்முன்னர் நிறுவகத்தினால் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட மற்றும் அத்தகைய திகதியன்று செல்லுபடியாகும் ஏதேனும் சான்றிதழ், தகைமை, அங்கீகாரம் அல்லது தர மதிப்பீடு என்பன அதிகாரசபையினால் அனுமதிக்கப்பட்டது அல்லது வழங்கப்பட்டு இருந்தாற் போன்று நியமிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடர்ந்து செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

10. நியமனத் திகதிக்கு உடன்முன்னர் உள்ளதான ஏதேனும் ஒப்பந்தம், உடன்படிக்கை, உரிமம், அனுமதிப்பத்திரம், சான்றிதழ், அங்கீகாரம், தர மதிப்பீடு, பதிவேடுகள் அலலது வேறு ஆவணம் என்பவற்றில் நிறுவனத்துக்கான ஏதேனும் மதிப்பீடு சந்தர்ப்பம் வேறுவகையில் தேவெப்படுத்தினாலன்றி, அதிகாரசபைக்கான குறிப்பீடு என்றாற்போன்று பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

11. நிறுவகத்தெ தாபிக்கின்ற 1995 ஆம் ஆண்டு யூலை 28 ஆந் திகதிய 882 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை ஆனது இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதுடன் நிறுவகமானது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து கலைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

சுனில் ஹந்துன்நெத்தி,
கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2026, ஒற்றோபர் 26.

EOG 11 - 0039